DINAMALAR

11 JULY 2022

PAGE 4

# துணைவேந்தருக்கு கூடுதல் பொறுப்பு

**புதுச்சேரி, ஜூலை 11–**

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கிற்கு கூடுதல் பொறுப்பாக காந்தி கிராம பல்கலைக்கழக துணை வேந்தர் பதவி வழங்கப் பட்டுள்ளது.



குர்மீத் சிங்

இது குறித்து புதுச்சேரி பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் விடுத்துள்ள செய்திக் குறிப்பு :

துணைவேந்தர் குர்மீத் சிங், தமிழ்நாடு காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக்கழக துணை வேந்தராக பொறுப்பேற்க உள்ளார். இதற்கான உத்தரவை, மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பு செயலர் விஜயலட்சுமி மகாதேவன் பிறப்பித்துள்ளார். குர்மீத் சிங், புதுச்சேரி பல்கலைக்கழக துணை வேந்தராக கடந்த 2017, நவ., 29ம் தேதி பொறுப்பேற்றார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

MAALAI MALAR

11 JULY 2022

PAGE 2

புதுவை பல்கலைக்கழக

# துணைவேந்தருக்கு கூடுதல் பொறுப்பு

புதுச்சேரி, ஜூலை 11—

புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

துணைவேந்தர் குர்மீத் சிங், தமிழ்நாடு காந்தி கிராம நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் துணைவேந்தராக கூடுதல் பொறுப்பேற்க உள்ளார். இதற்கான உத்தரவை மத்திய கல்வி அமைச்சகத்தின் சார்பு செயலர் விஜய லட்சுமி மகாதேவன் பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.